080

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
முன்-பள்ளி கல்விச் சான்றிதழ் நிகழச்சித்திட்டம்
முதலாம் அரையாண்டு இறுதிப்பரீட்சை - 2006/2007
ESC 1121/ESC 1132 – முன்-பள்ளி கல்விக்கோட்பாடுகள்
காலம்: இரண்டு(02) மணித்தியாலங்கள்

திகதி: 21.10.2006 நேரம்: மு.ப 10.00 - பி.ப 12.00

நான்கு வினாக்களுக்கு மட்டும் விடை தருக.

01. (i) 'முன்-பள்ளி கல்வி' என்பதனால் நீங்கள் விளங்கிக் கொள்வது என்னவென சுருக்கமாக விளக்குக.
(08 புள்ளிகள்)

(ii) முன்-பள்ளி கல்வியின் நான்கு(04) நோக்கங்களைக் குறிப்பிடுக.
(04 புள்ளிகள்)

(iii) மேலே குறிப்பிட்ட இந்த நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக ஒரு முன்-பள்ளியில் நடைமுறைப்படுத்தக்கூடிய இரு நடவடிக்கைகளைத் தெரிவு செய்து விளக்குக.
(13 புள்ளிகள்)

02. (i) 'பிள்ளை மையக்கல்வி' என்ற எண்ணக்கருவைச் சுருக்கமாக விளக்குக.
(08 புள்ளிகள்)

(ii) இந்த எண்ணக்கருவை விருத்திசெய்வதற்குப் பங்களிப்புச்செய்த கல்வித் தத்துவியலாளர்கள் இருவரின்(02) பெயர்களைக் குறிப்பிடுக.
(02 புள்ளிகள்)

(iii) நீங்கள் பெயரிட்ட இரு தத்துவவியலாளர்களும் முன்-பள்ளி வயதுப் பிள்ளைகளுக்கு கல்வி வழங்குவது பற்றிக் கூறிய கருத்துக்களைத் தருக.
(15 புள்ளிகள்)

03. கீழே தரப்பட்டுள்ள நாடுகளில் இரண்டினைத் தெரிவு செய்து ஆரம்ப பிள்ளைப்பருவக் கல்வி இந்த நாடுகளில் எவ்வாறு வழங்கப்படுகின்றது என்பதை விளக்குக.

(i) யப்பான் (ii) சீனா (iii) ருசியா (iv) ஐக்கிய இராச்சியம்

(25 புள்ளிகள்)

04. (i) ஒரு சிறந்த முன்-பள்ளி ஆசிரியரிடம் இருக்க வேண்டிய ஐந்து(05) பண்புகளைக் குறிப்பிடுக.

(05 புள்ளிகள்)

(ii) இந்தப்பண்புகள் ஒரு சிறந்த முன்-பள்ளி ஆசிரியரிடம் ஏன் இருக்க வேண்டுமென நீங்கள் கருதுகின்றீர்கள் என்பதனை விளக்குக.

(10 புள்ளிகள்)

(iii) மேலே குறிப்பிட்ட பண்புகளை தன்னில் விருத்தி செய்து கொள்வதற்காக ஒரு முன்-பள்ளி ஆசிரியர் முன்-பள்ளி ஆசிரிய கல்வி நிகழச்சித்திட்டமொன்றில் பங்குபற்ற வேண்டியதன் முக்கியத்துவத்தினை எடுத்துக்காட்டுக.

(10 புள்ளிகள்)

05. (i) ஆரம்ப பிள்ளைப்பருவ பராமரிப்புக்கும், கல்விக்குமாக இலங்கையில் இயங்கும் இரு வகையான அமைப்புகள்/நிலையங்களைப் பெயரிடுக

(05 புள்ளிகள்)

(ii) இலங்கையில் இவ் இரு வகைகளும் எவ்வாறு இயங்குகின்றன என்பதை வெவ்வேறாக விளக்குக.

(20 புள்ளிகள்)

06. (i) இலங்கையின் முன்-பள்ளி கல்வியின் வரலாற்றுப் பின்னணியைச் சுருக்கமாக விளக்குக

(10 புள்ளிகள்)

(ii) இலங்கையின் முன்-பள்ளி கல்வியின் முன்னேற்றத்திற்கும் அபிவிருத்திக்கும் அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களின் பங்களிப்பினை விமர்சன ரீதியாக பரிசீலிக்குக.

(15 புள்ளிகள்)

(பதிப்புரிமை பெற்றது)